**ஊடக அறிவித்தல்**

**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2026**
**தனியார் வகுப்புக்கள் நடாத்துவதைத் தடை செய்தல்**

2026 க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை 10 ஆம் திகதி ஓகஸ்ட் மாதம் 2026 தொடக்கம் 09 ஆம் திகதி செப்ரெம்பர் மாதம் 2026 வரை 2532 பரீட்சை நிலையங்களில் நாடளாவிய ரீதியில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1968ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 22ஆம் உறுப்புரையின் கீழ் வெளியிடப்பட்டுள்ள கட்டளைகளுக்கமைவாக 2013.06.21ஆம் திகதி வெளியிடப்பட்ட 1816 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கமைவாக,

❖ 2026 க.பொ.த. (உ.தர)ப் பரீட்சையுடன் தொடர்புடைய விதத்தில் 04.08.2026 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி தொடக்கம் பரீட்சை முழுமையாக நிறைவடையும் வரை,

- பரீட்சார்த்திகளுக்காக தனியார் வகுப்புக்களை ஏற்பாடு செய்தலும் நடாத்துதலும்
- பாடம் தொடர்பான ஆலோசனைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகளை நடாத்துதல்
- மேற்படி பரீட்சையின் ஊக வினாப்பத்திரங்களை அச்சிடல், அவற்றை விநியோகித்தல்
- பரீட்சை வினாப்பத்திரத்திலுள்ள வினாக்களை தருவதாகவோ அல்லது அதற்குச் சமமான வினாக்களை வழங்குவதாகவோ சுவரொட்டிகள், பதாகைகள், கையேடுகள், இலத்திரனியல் அல்லது அச்சு ஊடகங்கள் மூலம் பிரசுரித்தல் அல்லது அவற்றைத் தம்வசம் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

யாரேனும் ஒருவரோ நிறுவனமோ வேறு தரப்பினரோ இக்கட்டளையைக் கவனத்திற் கொள்ளாது செயற்படின் அந்நபர் அல்லது அந்நிறுவனம் அல்லது அத்தரப்பினர் இச்சட்டத்தின் கீழ் குற்றவாளியாகக் கருதப்படுவர்.

யாரேனும் ஒருவரோ நிறுவனமோ தரப்பினரோ இக்கட்டளையை ஏதேனுமொரு விதத்தில் மீறிச் செயற்பட்டால் அது தொடர்பாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கோ பொலிஸ் தலைமையகத்திற்கோ அல்லது பரீட்சைத் திணைக்களத்திற்கோ பின்வரும் தொலைபேசி எண்கள் ஊடாக முறைப்பாடு செய்யலாம்.

| | |
|---|---|
| பொலிஸ் தலைமையகம் | - 0112421111 |
| பொலிஸ் அவசர அழைப்பு எண் | - 119 |
| இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நேரடி அழைப்பு எண் | - 1911 |
| பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை | - 0112784208/ 0112784537 |

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்

இலங்கை பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை, பத்தரமுல்ல.
01.08.2026